தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 6, பவ - திருவள்ளுவர் ஆண்டு, 2026.

1995, மார்ச் 20, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு"

செய்யத்தக்க செயலை ஆராய்தலும், அதற்குரிய வழிகளை ஆய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் ஆகிய சிறப்புகளை உடையதே நல்லமைச்சு ஆகும்.

---

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 61, திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. வி. கே. ஞானசாமி கேட்கிறார். மாண்புமிகு நிதியமைச்சர்.

61—

மொடக்குறிச்சி தொகுதியைத் தனித்தொகுதியாக மாற்றுதல்

*27314—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

[1995 மார்ச் 20

மொடக்குறிச்சி தொகுதியை தனித் தொகுதியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் இந்த தொகுதிகளுக்கான அறிவிப்புகளைப் பொறுத்தவரையில் அவற்றை எந்த அடிப்படையில் அறிவிக்கிறார்கள்? அந்த அறிவிப்புகள் மத்திய அரசால் அறிவிக்கப்படுகின்றனவா ? அல்லது மாநில அரசினுடைய அனுமதியோடு அறிவிக்கப்படுகின்றனவா ? தமிழகத்தில் ஏற்கனவே எந்த ஆண்டு இந்த அறிவிப்பை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்? இது எப்போது மாற்றப்படும் ? இந்தத் தொகுதிகளுக்கான மாறுதல் எந்த அடிப்படையில் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய 82 மற்றும் 170-வது பிரிவுகளின்படி நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற தொகுதிகளின் எல்லை வரையறை ஒவ்வொரு மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்குப் பிறகும் எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறான 1971 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளை மாற்றி அமைத்தல் குறித்த தொகுதி எல்லை வரையறை ஆணையம் அதாவது 'டீ-லிமிட்டேஷன் கமிஷன்' ஒன்று நிறுவப்பட்டது. அந்த ஆணையத்தின் பரிந்துரையின்பேரில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் வரையறை 1976-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்த ஆணையின்படி தமிழ்நாட்டுக்கு 39 மக்களவைத் தொகுதிகளும், 234 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளும் ஒதுக்கப்பட்டன. 1977-ஆம் ஆண்டில் ஒரு அரசமைப்புச் சட்ட திருத்தத்தின்மூலம் நாடாளுமன்றம்

1995 மார்ச் 20]

மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளினுடைய எண்ணிக்கையிலேயும், அவற்றின் பரப்புகளிலேயும் கி.பி. 2001-ஆம் ஆண்டில் எடுக்கப்பட இருக்கும் மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கு முன்னர் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது என்ற ஒரு தடையாணை பிறப்பிக்கப்பட்டது. சட்டப்படி ஏற்கனவே 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த மாற்றம் செய்ய வேண்டும். ஆனால் 1977-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த சட்டத்தின்படி கி.பி. 2001 வரை எந்த மாற்றுமும் செய்யக்கூடாது என்று செய்துவிட்டதன் காரணத்தால், இந்தத் தொகுதிகளை மாற்றியமைக்கிற ஒரு நிலை ஏற்படவில்லை. இந்தத் தடையை நீக்கி தொகுதிகளை மறுவரையறை செய்வதற்காக ஒரு அரசமைப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு 25-8-1994 அன்று நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டமுன்வடிவு 1991-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி தற்போதுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படாமல் தொகுதிகளை மாற்றியமைக்க வகை செய்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு தொகுதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த எண்ணிக்கையில் மாற்றம் செய்யக் கூடாது. தற்போதுள்ள தொகுதிகளில் மாற்றம் செய்ய ஒரு குழு அமைக்க வேண்டும். அந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றியதற்குப் பிறகுதான் தொகுதி மறுவரையறைக் குழு நியமிக்கப்படும். அது நியமிக்கப்படுகிற வரையில் எந்த மாற்றமும் ஏற்படாது. எனவே அந்த நிலைமை இப்போது ஏற்படவில்லை. உடனடியாக எந்த மாற்றமும் செய்வதற்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. இரா. தாமரைக்கனி.*

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஜனத்தொகை மற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகப் போய்க்கொண்டே இருக்கிற காரணத்தால் பாராளுமன்றத்தினுடைய தொகுதி எண்ணிக்கையை அதிகமாக்கவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டதே, அது என்னவாயிற்று ? அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கேட்டுக்கொள்ளுமா ? ஒன்றரை இலட்சம் வாக்காளர்கள் இருந்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் பணி செய்ய ஏதுவாக இருக்கும். இரண்டு இலட்சம், இரண்டரை இலட்சம்

வாக்காளர் எண்ணிக்கை இருக்கின்ற காரணத்தால் தொகுதிகளில் எம்.எல்.ஏ-க்கள் செயல்படுவதில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டிருப்பதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித்தான் நான் விளக்கமாக முதலிலே குறிப்பிட்டேன். கி.பி. 2001 வரை எந்த மாற்றமும் செய்யக் கூடாது என்று நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுவிட்டது. அதை எப்படியும் மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காக மறுபடியும் சட்டம் கொண்டு வந்து, எண்ணிக்கையின் அடிப்படையில் அல்லாமல் தொகுதிகளை மாற்றி அமைப்பதற்கு வழிவகை செய்கின்ற அளவுக்கு சட்டம் இருக்கிறது. ஆனால் இது இன்னும் நிறைவேறவில்லை. அதை நிறைவேற்றியதற்குப் பிறகுதான் டீ-லிமிடேசன் கமிஷன் என்று தொகுதி எண்ணிக்கையை வரையறுக்கும் ஆணையம் நியமிக்கப்படும், அதற்குப் பிறகுதான் மாற்ற முடியும். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று 1971க்குப் பிறகு, 1981, 1991 ஆகிய ஆண்டுகளில் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்க வேண்டும். ஆனால் ஏற்படவில்லை. அப்படி ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால்தான் நல்லது. விரைவில் எண்ணிக்கையை மாற்றுகின்ற தன்மை வந்தால்தான் நல்லது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில் 4 கோடிக்கு மேற்பட்ட வாக்காளர்கள் அமைந்து விட்டார்கள். அப்படி அமைந்துவிட்ட காரணத்தால் ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு லட்சம், இரண்டரை லட்சம் வாக்காளர்களை வைத்து சட்டமன்றத் தேர்தல் நடத்த வேண்டியிருக்கிறது. டீ-லிமிடேஷன் கமிட்டி வந்து எண்ணிக்கையை கூட்டலாம் என்ற அளவுக்கு வருமானால் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்கும் 6 சட்டமன்ற தொகுதிகள் என்று நாம் வைத்திருக்கிறோம்—சில மாநிலங்களில் 7 தொகுதிகள் வைத்திருக்கிறார்கள். இன்னும் சில மாநிலங்களில் 8 தொகுதிகள் வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் அப்படி வாய்ப்பு ஏற்படுகின்றபோது ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதியையும் மத்திய அரசு எண்ணிக்கையின் அடிப்படையில் வகுக்கும். அப்படி வகுக்கப்படுகின்றபோது, நமக்கு 39 நாடாளுமன்றத் தொகுதிகள் என்று இருக்கின்ற நிலையில் ஒவ்வொரு தொகுதிக்கும் குறைந்தது 8 சட்டமன்ற தொகுதிகளாவது வகுக்கப்பட்டால்தான் ஒரு

1995 மார்ச் 20]

லட்சம் ஒன்றரை லட்சம் வரை வாக்காளப் பெருமக்கள் அமைவார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை மாநில அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் இப்போது அதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை. சட்டம் குறுக்கே இருக்கிறது. சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகுதான் அதை செய்ய இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 1977-ஆம் ஆணடு கொண்டுவரப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலே தொகுதிகளினுடைய எண்ணிக்கையை கூட்டக்கூடாது, வேண்டுமானால் ரிசர்வ் தொகுதிகளை மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். 2001 வரை தொகுதிகளினுடைய எண்ணிக்கையை கூட்டக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் தமிழகத்தில் 4 கோடி வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அதில் 27%எஸ்.சி., எஸ்.டி., சமுதாயத்தை சேர்ந்த வாக்காளப் பெருமக்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையிலே 33% எஸ்.சி., எஸ்.டி. பாப்புலேசன் இருக்கிறது. இந்த எஸ்.சி., எஸ்.டி., மக்களுடைய ஜீவாதார உரிமையை பாதிக்கின்ற வகையிலே நாடாளுமன்றத்திலே சட்டம் இருப்பதாக நான் கருதுகிறேன். ஆகவே எஸ்.சி., எஸ்.டி., மக்களுடைய உணர்வுகளை, எஸ்.சி., எஸ்.டி., மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த உரிமையை சரியான முறையிலே பெற்றுத் தருவதற்கு தமிழக அரசு ஒரு தீர்மானத்தை இயற்றி, இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களுக்கு தமிழக அரசு ஒரு முன் உதாரணமாக இருந்து விரைவில் வர இருக்கின்ற தேர்தலிலே எஸ்.சி., எஸ்.டி., மக்களுக்கு உரியதை--அதாவது பர்சன்டேஜ் அடிப்படையில் பார்க்கிறபோது இன்றைக்கு 44 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். வாக்காளர் அடிப்படையில் பார்க்கிறபோது 60 தொகுதிகள் சட்டமன்ற தொகுதிகள் எஸ்.சி., எஸ்.டி., மக்களுக்காக வரவேண்டியிருக்கிறது . --அதைப் பெற்றுத் தருவதற்கு தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறை மக்கள் தொகை கணக்கு எடுக்கப்படுகின்றபோது இந்த எண்ணிக்கை வரையறை செய்யப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற கணக்கிலே 18% வருகிறார்கள். சில பல மாநிலங்களில் 25%, 27%, 28% கூட இருக்கிறது. அகில இந்தியாவைப் பொறுத்தவரையில் இதன் சராசரி 22% வரை இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மண்டல்

கமிஷன்கூட 22% தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் 27% பிற்பட்டவர்கள் என்றும் 50%க்கு உள்ளே இருக்க வேண்டுமென்று கருதி சிபாரிசு செய்தது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1981-ல் எண்ணிக்கையை வைத்து ஒரு டீ-லிமிடேசன் கமிட்டி அமைந்திருக்க வேண்டும். 1991-ல் அமைந்திருக்க வேண்டும். அது தடைபடுத்தப்பட்டுவிட்ட காரணத்தினால்தான், கி.பி. 2001-ல் மக்கள் எண்ணிக்கை வரும் வரை காத்திருக்க வேண்டிய ஒரு அவசியம் ஏற்படுகிறது. அந்த அவசியத்தைக் கருதி, முன்கூட்டியே வைக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, எண்ணிக்கையை அதிகப்படுத்தாமல் மாற்றாமல் தொகுதிகளை மாற்றிக் கொள்ளலாம் என்பதிலும் சில சங்கங்கடங்கள் வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் அந்த மாவட்டத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாக உள்ள தொகுதியை தனித் தொகுதி என்று ஒதுக்கி வைத்திருக்கிறோம். அந்த வகையிலேதான் இப்போது ஒதுக்கப்படுகிறது. எண்ணிக்கையை மாற்றக் கூடாது. அந்தத் தொகுதியினுடைய எல்லையை மாற்றக்கூடாது என்று வைத்துவிட்டால், வேறு எந்தத் தொகுதியையும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஏற்ற தொகுதியாக அமைக்க முடியாது. இந்த டீ-லிமிடேசன் கமிட்டியானது, தொடர்ந்து தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாக இருக்கின்ற சில, பல கிராமங்களை எடுத்து ஒரு தொகுதியிலே போட்டு, அந்தத் தொகுதியை தனித் தொகுதியாக ஆக்க வேண்டும். தனித் தொகுதியாக இருப்பதை பொதுத் தொகுதியாக ஆக்கிவிட்டு, பொதுத் தொகுதியாக இருப்பதை தனித் தொகுதியாக ஆக்க வேண்டுமென்றால் சில தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் கிராமங்களை சேர்க்க வேண்டும். பொது தொகுதி ஆக்க அதிலே இருந்து சில கிராமங்களை எடுக்க வேண்டும். அதை எல்லாம் அந்த டீ-லிமிடேசன் கமிட்டிதான் செய்யும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கின்ற மாவட்டம். அவ்வளவு புகழ் பெற்ற மாவட்டத்திலே இதுவரையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று ஒரு தனித் தொகுதி கிடையாது. ஒரு மாவட்டமே தனித் தொகுதி இல்லாமலேயே கடந்த காலங்களிலே புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஆகவே இதிலே ஒரு தனி அக்கறை கொண்டு தேர்தல் ஆணையத்திடம் கலந்து பேசி இதற்கு ஒரு

1995 மார்ச் 20]

வாய்ப்பை ஏற்படுத்தித் தரமுடியுமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 234 சட்டமன்றத் தொகுதிகளிலிருந்து என்று வருகிறபோது, அதிலே 18 சதவிகிதம் என்று கணக்கு எடுத்து அந்த வகையிலே அதிகமான அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கின்ற பகுதிகளை பிரிக்கிறபோது, மற்றைய மற்றைய மாவட்டங்களிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் தொகுதிகளை ஒப்பிட்டு பார்க்கிறபோது கன்னியாகுமரி தொகுதியைப் பொறுத்து இருக்கின்றவர்களிலே எண்ணிக்கை சதவிகிதம் குறைவாக இருப்பதன் காரணமாக அங்கே ஒரு தொகுதி அமையவில்லை. ஆகவே இதனுடைய எண்ணிக்கை 234 என்று 300-ஐ தாண்டுகிற அளவுக்கு, நாம் கூறுகிறபடி, ஒரு நாடாளுமன்றத்திற்கு 6 தொகுதி என்பதை விட்டு 8 தொகுதியாகின்றபோது கூடுதலாக வரும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே வேண்டுமென்றால் கன்னியாகுமரி மாவட்டம் சேர்க்கக்கூடிய சூழ்நிலை வரும். இது எல்லாமே 2001க்குப் பிறகுதான் நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த டீ-லிமிட்டேஷன் கமிட்டி வந்து முடிந்து, அவர்கள் மீண்டும் பரிசீலனை 2001க்கு பிறகுதான் மாற்றவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும்கூட, ஒரு தொகுதி நீண்டகாலமாக 1967லிருந்து எஸ்.டி., எஸ்.சி., தொகுதி என்றால், தனித் தொகுதி என்றால் அவர்களேதான் நிற்கவேண்டும். மற்ற ஜாதியினருக்கு இடமே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே உங்களுடைய அதிகாரத்திற்குட்பட்டு அதையாவது செய்யவேண்டும். ஏனென்றால் நீண்டகாலமாக 20 வருடங்கள் 25 வருடங்கள் அப்படி இருந்துகொண்டு இருக்கிறது. அதை மாற்றி அந்த தொகுதி தனித் தொகுதி, இது பொது தொகுதி என்று மாற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி எல்லை, சட்டமன்றத்தினுடைய எல்லை வரையறை போன்றவைகளை மத்திய

அரசுதான் முடிவு செய்யவேண்டும். தேர்தல் ஆணையம்தான் முடிவு செய்யவேண்டும். அரசமைப்பு சட்டத்தின்படிதான் முடிவு செய்யவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற உணர்வுப்படி இருந்திருந்தால் இந்த சட்டம் 1977லே கொண்டுவந்து இருக்கக்கூடாது. அரசமைப்பு சட்டம் தெளிவாகச் சொல்கிறது. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த தொகுதி வரையறை செய்யவேண்டுமென்று. அந்த வகையிலேதான் தொடர்ந்து 1951, 1961, 1971 வரையிலே செய்யப்பட்டது. 1981, 1991லே செய்யப்படவில்லை. செய்யப்பட்டு இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற உணர்வுக்கேற்ப சில தனித் தொகுதிகளை பொதுத் தொகுதிகளாக மாற்றம் செய்து, சில பொதுத் தொகுதிகளை தனித் தொகுதியாக மாற்றவும், பலருக்கு வாய்ப்பு அளிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும். அந்தச் சூழ்நிலைக்கூட இப்போது இருக்கிற சட்டத்திலே வர இயலாது. ஆனால் நிறைவேற்றுவதற்குள்ளாக 2001 வந்தாலும் வந்துவிடும். அதற்குப் பிறகுதான் எண்ணிக்கையின் அடிப்படையிலேதான் முடிவு செய்யவேண்டி வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–ஆம் ஆண்டு தொகுதிகள் நாடாளுமன்றத்தில் பிரிக்கப்படும்போது, மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து பிரிக்கப்படுகிறது. மக்கள் தொகையை இந்தியாவிலே குடும்பக் கட்டுப்பாட்டை பேணி பாதுகாக்கின்ற மாநிலமாக இருக்கிறது. கட்டுப்படுத்துகிற மாநிலமாக தமிழகம் இருக்கின்ற காரணத்தினால் அதனால் நாடாளுமன்றத்தினுடைய தொகுதி எண்ணிக்கையைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அது அடிப்படையாக இல்லாமல், நாடாளுமன்றத்தினுடைய எண்ணிக்கையை கூடுதல் ஆக்கக்கூடிய சூழ்நிலையை அரசு பரிந்துரை செய்து ஆவனசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அரசமைப்பு சட்டத்தின்படி நாடாளுமன்றத்தினுடைய எண்ணிக்கைக் கூட வழியில்லை. அது மட்டுமல்லாமல் நாடாளுமன்றத்தினுடைய தொகுதி எண்ணிக்கை என்பது நிரந்தமாக இருக்கின்ற ஒன்று. அந்த எண்ணிக்கையினுடைய அடிப்படையிலேதான் மாநிலங்களுடைய மக்கள் தொகை

1995 மார்ச் 20]

கணக்கெடுப்பின் அடிப்படையிலேதான் சட்டமன்றத் தொகுதிகள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே கூட 41 நாடாளுமன்றத் தொகுதிகள் இருந்தன. இன்றைக்கு மக்கள் எண்ணிக்கையிலே பார்க்கின்றபோது மேற்குவங்காளத்திற்கு கூடுதலாக போய் வேறுசில இடங்களுக்குக் கூடுதலாகப் போய் நமக்கு 41 என்பது 39 ஆக ஆகிவிட்டது. ஆகவேதான் இதைச் செய்கின்றபோது 1951-ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கையை வைத்துத்தான் இந்த எண்ணிக்கை நிர்ணயிக்கப்படவேண்டுமென்று ஒரு கருத்தைக்கூட நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த நிலை ஏற்படாத வரையிலும் நாமாகவே எதையும் செய்வதற்கு இல்லை.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 62, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

62—

ஆரணியைத் தனிக்கோட்டமாக மாற்றுதல்

*22318—டாக்டர் **ஜெய்சன் ஜேக்கப்:***

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

ஆரணியைத் தனிக் கோட்டமாக மாற்றும் அரசின் திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணியை வருவாய்க் கோட்டமாக மாற்ற திட்டம் எதுவும் அரசின் குறிப்பில் இல்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாய் கோட்டமாக மாற்றுகிற எண்ணம் அரசின் குறிப்பில் இல்லையென்று சொன்னார்கள். திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலே மொத்தம் 6 தாலுக்காக்கள் இருக்கின்றன. செய்யாறு தாலுகா, வந்தவாசி தாலுகா, ஆரணி தாலுகா, திருவண்ணாமலை தாலுகா, போளூர் தாலுகா, செங்கம் தாலுகா என்று 6 தாலுக்காக்கள் இருக்கின்றன. இந்த 6